மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறை வேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 49

திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர் களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், அ. சுவாமிதாஸ், செ. சிவசாமி, ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-14 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(7) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ: சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

143. தமிழ் நாடு 1968 ஆம் ஆண்டு காதி-கிராமத் தொழில் வாரிய விதிகளில் திருத்தமொன்றுசெய்வது குறித்து துறையின் 4—1—1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 19-ல் வெளியான அறிவிப்பு (தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு காதி-கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 18/1959) 29 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது).

144. தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில எல்லைக்குள் உள்ள பாண்டியன் கிராம வங்கிகளின் கிளைகள் அனைத்தையும் அங்கீகாரம் (ஏற்பளிக்கப் பட்ட) பெற்ற வங்கியாக சேர்த்துக் கொள்வது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 23—2—1979 ஆம் தேதியிடப்பட்ட அரசாணை எண். 199-ல் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின (தமிழ் நாடு சட்டம் 24/1961) 63 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

***170.** கோரிக்கை எண். 49-பொதுச் சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்குதலுக்கான முதலீடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1979–80 (தமிழ், ஆங்கிலம்).

குறிப்பு : தேவையிருப்பின், பேரவை மாலையிலும் கூடும்.

கோரிக்கை எண்கள். 29, 33, 49-க்கான வெட்டுத் தீர்மானற்களின் பட்டியல் 18—4—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

**18—4—1979* அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

இணைப்பு I.

[498 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 721-க்கான விடையைக்காண்க].

பல்லவமேடு தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையால் 1970–71 ஆம் ஆண்டுகளில் அகழ்வாய்வு செய்யப் பெற்றது. மத்திய தொல் பொருள் ஆய்வுத் துறையினரால் இதே பகுதியில் 1953–54 ஆம் ஆண்டுகளில் சில இடங்களில் அகழ்வாய்வு செய்யப்பெற்றது.

பல்லவமேடு காஞ்சிபுரத்தில் ஒரு மேடான பகுதியாக விளங்குகிறது. பல்லவ மன்னர்களுடன் தொடர்பு கொண்டு விளங்கியது என கூறப்படுகிறது. இந்த இடத்தில் தொன்மையான வரலாற்றை அறிவதற்காக அகழ்வாய்வு செய்யப் பெற்றது. மூன்று குழிகள் தோண்டப் பட்டன. அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள் பல்லவமேடு பகுதியின் வரலாற்றை அறிய உதவுகிறது. மூன்று வரலாற்றுக் காலத்தில் இங்கு மக்கள் வாழ்ந்திருந்தனர் என்று அச்சான்றுகள் கூறுகின்றன.

முதற் காலத்தில் (Period I) சிகப்பு நிற பானை ஒடுகள் அதிக அளவிலும் சுடுமண்பொம்மைகளும், சங்கு வளையல்களும் கிடைத்தன. அகழ் வாய்வுக் குழியின் கீழ் பகுதி மணலாக